பக்கங்கள்: 06

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 11 செவ்வாய்க்கிழமை 23.02.2021 கதிர் 341



# ஜெனிவாச் சவாலை முறியடித்தே தீருவோம்

## ஜனாதிபதி கோட்டா சூளுரை

கொழும்பு, பெப். 23

நட்பு நாடுகளின் ஆதரவுடன் ஜெனிவாச் சவாலை நாம் முறியடித்தே தீருவோம். புதிய பிரேரணையையும் வலுவிழக்கச் செய்வோம்.

- இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடர் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நேற்று ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ளது. கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இம்முறை காணொளி ஊடாகவே இந்தக் கூட்டத் தொடர் நடைபெறுகின்றது. இந்தக் கூட்டத் தொடரில் இலங்கை குறித்து விவாதம் ஒன்றும் நடைபெறவுள்ள நிலையில் புதிய பிரேரணை ஒன்றும் தாக்கல் செய்யப்படவுள்ளது. 2

## ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தொடர்பில் எச்சரிக்கை!

### விழிப்பாகவே இருக்கின்றதாம் இலங்கை



ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தொடர்பில் ஐ.நா. பாதுகாப்பு சபையால் விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை கவனத்தில் 2

## ஜனாதிபதியும் பிரதமரும் கொவிட் தடுப்பூசி ஏற்றல்

கொழும்பு, பெப்.23

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் கொவிட் தடுப்பூசிகளைப் போட்டுக்கொண்டுள்ளனர் என்று அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் இன்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே, அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

கொவிட் தடுப்பூசியை ஜனாதிபதியும், பிரதமரும் போட்டுக் கொண்டுள்ளார்களா? என்றும், இல்லை என்றால் எப்போது அவர்கள் அதனைப் போட்டுக்கொள்வார்கள் என்றும் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார். 2

## ஜெனிவா விவகாரம் இலங்கைக்கு அச்சுறுத்தலாக அமையவே மாட்டாது

### அடித்துக் கூறுகின்றார் பிரதமர் மஹிந்த



ஜெனிவா விவகாரம் இலங்கைக்கு ஒருபோதும் அச்சுறுத்தலாக அமையாது எனவும், பல நாடுகள் இம்முறை இலங்கைக்கு ஆதரவு வழங்கும் எனவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற ஆளும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த நல்லாட்சி அரசு, ஜெனிவாவில் இலங்கையை அடகு வைத்திருந்தது. இலங்கை மக்களின் அமோக அணியுடன் எமது பதிய ஆட்சியில் நாட்டை 2

## ஈஸ்டர் தாக்குதல் குறித்த விசாரணை அறிக்கை சபாநாயகரிடம் கையளிப்பு



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை சபாநாயகரிடம் இன்று கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில், ஜனாதிபதி செயலகத்தின் பணிப்பாளர் ஹரிகுப்தா ரோஹணாதீர 2

## நெடுந்தீவுக் கடலில் காணாமல் போன இருவரில் ஒருவர் இன்று சடலமாக மீட்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,பெப்.23

குறிகட்டுவானில் இருந்து நெடுந்தீவு நோக்கிப் பயணித்த படகில் இருந்து காணாமல்போன இருவரில் ஒருவரது சடலம் நயினாதீவை அண்டிய பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவில் இருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை படகில் பயணித்த மேனன் மற்றும் றொபின்சன் ஆகியோரே காணாமல் போயிருந்தனர்.

இவர்கள் அன்று காலை 10 மணியளவில் நெடுந்தீவில் இருந்து கடல் உற்பத்திகளைத் தனியான படகில் ஏற்றியவாறு நெடுந்தீவில் இருந்து குறிகட்டுவான் நோக்கிப் பயணித்துள்ளனர். அந்தப் படகில் ஏற்றி வரப்பட்ட கடல் உற்பத்திகள் குறிகட்டுவானில் தரித்து நின்ற கூலர் வாகனத்தில் ஏற்றப்பட்டுள்ளது. கூலரிற்குப் பொருள்களைக் 2

### ரஞ்சனை நாடாளுமன்றத்துக்கு அனுமதிக்குமாறு கோரி

## எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையில் இன்று போராட்டம்

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட எம்.பி. ரஞ்சன் ராமநாயக்கவை நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ள அனுமதிக்குமாறு கோரி, எதிர்க்கட்சியினர் இன்று சபையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். 2



## பேரவைக்கு அனுமதி வேண்டி தமிழரசின் மத்திய செயற்குழுவுக்கு சி.வீ.கே. கடிதம்

(ந.லோகதயாளன்)

தமிழ்த் தேசியக் கட்சிகள் 10 ஒன்றாகச் செயற்படுவது தொடர்பில் கட்சின் முடிவை எதிர்வரும் 28ஆம் திகதி அறிவிக்க இலங்கைத் தமிழரசுக் கட்சியில் மத்திய செயற்குழுவிடம் அனுமதி கோரி அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் சி.வீ.கே.சிவஞானம் கடிதம் அனுப்பியுள்ளார் -

21.02.2021 அன்று நடைபெற்ற பத்துக் கட்சிகளின் கூட்டத்தில், தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள பத்துக் கட்சிகளும் இணைந்து ஒரு தமிழ்த் தேசியப் 2

## 'ரிக்– ரொக்'கில் பிரபாகரனின் படங்களைப் பாவித்து வீடியோ

### ரி.ஐ.டியால் இளைஞர் ஒருவர் கைது



சமூக வலைத்தளமான ரிக்- ரொக்கில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் புகைப்படங்களைப் பயன்படுத்தி வீடியோ செய்து பதிவேற்றிய 2

## வெற்றிலைக்கேணியில் இளைஞர் மீது புலனாய்வாளர்கள் சரமாரியான தாக்கு

### யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்ப்பு

(எஸ். நிதர்ஷன்)

யாழ். வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக்கேணியில் அரச புலனாய்வாளர்களின் கடுமையான தாக்குதலால் பாதிக்கப்பட்ட இளைஞர் ஒருவர், யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் வேளை வெற்றிலைக்கேணியில் உள் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த 2



## எதிர்க்கட்சி உறுப்பினர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரஞ்சன் ராமநாயக்க நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்வது தொடர்பாக, தெளிவான அறிவுறுத்தல்களை சபாநாயகர் வெளியிட வேண்டும் என்று எதிரணியினர் கோரிக்கை விடுத்தனர்.

எதிரணியினர் ஆர்ப்பாட்டத்தை ஆரம்பிக்கும்போது, பிரதி சபாநாயகரே சபையில் இருந்தார். ஆர்ப்பாட்டத்துக்கு இடையேதான் சபாநாயகர் வருகை தந்தார்.

ரஞ்சன் ராமநாயக்கவை நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ள அனுமதிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தொடர்ந்தும் கோரிக்கை விடுத்து வந்த நிலையில், அதற்கு சபாநாயகர் முறையாகப் பதிலளிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு உயிர் அச்சுறுத்தல் இருக்கின்றது எனவும், அவரை வெலிக்கடை சிறைச்சாலைக்கு இடம் மாற்றுமாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

## ’ரிக்- ரொக்’கில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இளைஞர் ஒருவர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவைச் சொந்த இடமாகக் கொண்ட 25 வயதுடைய குறித்த நபர் தற்போது ஹற்றனில் வசித்துவரும் நிலையிலே கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கைதுசெய்யப்பட்ட நபரின் தொலைபேசியில் விடுதலைப்புலிகள் தொடர்பான படங்கள், விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் படங்கள், தயாரிக்கப்பட்ட பல வீடியோக்கள் என்பனவும் காணப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நபர், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், சமூக ஊடகங்களில் இது போன்று விடுதலைப்புலிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் படங்கள், வீடியோக்கள் பகிரப்படுவதைக் கண்காணிப்பதற்கெனப் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸார், குற்றப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் உள்ளடங்கலாக ‘சைபர் ரோந்து’ என்கின்ற சிறப்புப் பிரிவு நியமிக்கப்பட்டுள்ளது. - என்றார்.

## வெற்றிலைக்கேணியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞரை மறித்த புலனாய்வாளர்கள், எங்கே சென்று வருகின்றாய்? என்று கேட்டுள்ளனர். அதற்குப் பதிலளித்த இளைஞர், இது வீதி. இதனால் போய்வர முடியாதா? என்று கேட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து குறித்த இளைஞரை விசாரிக்க வேண்டும் என்று அழைத்துச் சென்ற புலனாய்வாளர்கள், வெற்றிலைக்கேணி சுடலைப் பகுதியில் வைத்து அவரைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

தனது மகனைப் புலனாய்வாளர்கள் அழைத்துச் சென்றதைக் கேள்வியுற்ற தாயார், சுடலைப் பகுதிக்கு ஓடோடிச் சென்றுள்ளார். அங்கு சென்ற தாயைக் கண்டதும் மகன் விம்மி விம்மி அழுதுள்ளார். ஏன் எனது மகனை அடித்தீர்கள்? என்று புலனாய்வாளர்களைப் பார்த்து தாயார் கேட்டதற்கு, தாங்கள் அடிக்கவில்லை என்று அவர்கள் பதிலளித்துள்ளனர்.

அங்கிருந்து மகனை அழைத்துச் சென்ற தாயார் அவரை யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்துள்ளார்.

அவர் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையின் 24ஆம் விடுதியில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று அவரது தாயார் தெரிவித்தார்.

## பேரவைக்கு அனுமதி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பேரவையாக செயற்படுவது பற்றிய கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்தக் கட்சிகள் தமது தனித்துவத்தைப் பேணிக்கொண்டு தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஒருமித்த கருத்தில் செயற்படுவதே இதன் நோக்கம்.

இது பற்றிய அனைத்துக் கட்சிகளின் கருத்துகளையும் அறிந்து எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறவுள்ள கூட்டத்தில் தீர்மானிக்கலாம் என முடிவாகியது.

எமது கட்சியைப் பொறுத்த வரையில் எதிர்வரும் 27.02.2021ஆம் திகதி நடைபெறவுள்ள கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அதன் முடிவு அறியத்தரப்படும் என எம்மால் தெரிவிக்கப்பட்டது.

எனவே, இதனை மத்திய செயற்குழுவின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கலாம் எனக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராஜா மற்றும் பதில் பொதுச்செயலாளர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது.

## நெடுந்தீவுக் கடலில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கை மாற்றிய பின்பு மீண்டும் நெடுந்தீவு நோக்கி மாலை ஒரு மணியளவில் அவர்களின் படகு பயணத்தை ஆரம்பித்துள்ளது.

அது மாலை 5 மணியளவில் ஆள்கள் யாரும் அற்ற நிலையில் நெடுந்தீவு கரையில் ஒதுங்கியதனால் நெடுந்தீவு மீனவர்கள் மற்றும் கடற்படையினர் சகிதம் தீவிர தேடுதல் இடம்பெற்றது.

இரு நாள்களாகத் தேடுதல் இடம்பெற்ற நிலையில் இன்று மாலை ஒருவரின் சடலம் கண்டுகொள்ளப்பட்டது. இருப்பினும் மேலும் ஒருவரை தேடும் படலம் தொடர்கின்றது.

## ஈஸ்டர் தாக்குதல் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்த அறிக்கையை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்றத்தின் செயலாளரும் கலந்துகொண்டார்.

இதேநேரம், இந்த அறிக்கையை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக சபாநாயகர் தெரிவித்தார்.

மேலும், அறிக்கையின் பிரதியொன்று நாடாளுமன்ற வாசிகசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அவற்றைப் பார்வையிடவும் வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்தொடர்பானவிசாரணைகளின் இறுதி அறிக்கையின் ஆங்கில மற்றும் சிங்கள பிரதிகள் நேற்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதியும் பிரதமரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதற்குப் பதிலளித்த அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல, அவர்கள் இருவரும் தடுப்பூசியைப் போட்டுக்கொண்டுள்ளனர் என்றார்.

## ஜெனிவா விவகாரம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மீட்டெடுத்து விட்டோம்.

நாட்டின் இறைமையை மீறி - மக்களின் ஆணையை மீறி நாட்டுக்கு எதிராக எந்தப் பிரேரணைகளையும் முன்வைக்க முடியாது. அதை மீறி முன்வைக்கப்படும் பிரேரணைகள் பயனற்றவையாகவே போய்விடும்.

நாம் எவருக்கும் அஞ்சவில்லை. இந்த ஜெனிவா விவகாரமும் இலங்கைக்கு ஒருபோதும் அச்சுறுத்தலாக அமையாது. பல நாடுகள் இம்முறை இலங்கைக்கு ஆதரவு வழங்கும்.

எமது நாட்டின் நிலைப்பாடுகளை ஜெனிவா அமர்வில் வெளிவிவகார அமைச்சர் தெளிவாக எடுத்துரைப்பார் - என்றார்.

## ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எடுக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல இன்று தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின்போது, ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் செயற்பாடு தொடர்பில் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் பிரமுகரால் விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவ்வப்போது இவ்வாறான தகவல்கள் கிடைக்கும். அவை தொடர்பில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும். தேவையான தகவல்கள் உரிய வகையில் வெளியிடப்படும். சில தகவல்களை வெளிப்படையாகக் குறிப்பிடமுடியாது. ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை இடம்பெறும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## சாவகச்சேரி விபத்தில் இளைஞன் பரிதாபச் சாவு

*ஹைஏஸ் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதி இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.*

*இந்தச் சம்பவம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.40 மணியளவில் சாவகச்சேரி ஐயா கடையடியில் இடம்பெற்றுள்ளது. நெல்லியடி விக்னேஸ்வரா வீதியைச் சேர்ந்த அன்ரனி சியான் (வயது - 20) என்ற இளைஞனே உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்தார் என்று தெரிவித்த சாவகச்சேரி பொலிஸார் ஹைஏஸ் வான் சாரதியைக் கைது செய்துள்ளனர் எனக் கூறினர்.*

*சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.*

## ஜெனிவாச் சவாலை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தநிலையில், ஆளும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களை நேற்று ஜனாதிபதி சந்தித்துக் கலந்துரையாடியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் சகல உறுப்பு நாடுகளுக்கும் இலங்கைக்கு ஆதரவு வழங்குமாறு கோரி கடிதங்கள் அனுப்பியுள்ளேன். எமது நட்பு நாடுகள் இலங்கைக்கு ஆதரவை வழங்கும் என்பதில் உறுதியான நம்பிக்கையில் இருக்கின்றோம்.

புதிய பிரேரணை ஊடாக எந்தத் தரப்பும் எமக்குச் சவால் விட முடியாது. அந்தப் பிரேரணை ஒன்றில் தோல்வியடையும் அல்லது வலுவிழந்து போகும்.

எமது நட்பு நாடுகள் இலங்கையை ஒருபோதும் காட்டிக்கொடுக்காது. ஆனால், எமது நாட்டிலுள்ள தமிழ்க் கட்சியினர் உள்ளிட்ட எதிரணியினர் நாட்டைக் காட்டிக்கொடுக்கும் துரோக நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன. ஆனால், இந்த நடவடிக்கைகள் ஒருபோதும் வெற்றிபெற மாட்டாது. நட்பு நாடுகளின் ஆதரவுடன் ஜெனிவாச் சவாலை நாம் முறியடித்தே தீருவோம்.

எமது நாடு இறைமை உள்ள நாடு என்பதை நாட்டுக்கு எதிராகத் துரோக நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் கவனத்தில் கொள்ள வேண்டும் - என்றார்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## காட்டிக் கொடுப்பவர்கள் யார்?

**ஜெனிவாத் திருவிழா நேற்று ஆரம்பமாகி விட்டது.**

**ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இன்றிரவு இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனா மெய்நிகர் முறையில் தமது நாட்டின் கருத்தை முன்வைக்க இருக்கின்றார்.**

**இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் பிரிட்டன், ஜேர்மன், கனடா, மொன்ரிநிக்கரோ, மஸிடோனியா ஆகியவை முன்மொழிந்து கொண்டு வரும் பிரேரணையை வெற்றிகரமான தீர்மானமாக நிறைவேற்றுவோம் என்று பிரிட்டனும் ஏனைய நாடுகள் சிலவும் கூறியுள்ளன.**

**இந்தப் பிரேரணையை இலங்கை எதிர்ப்பதால் 47 நாடுகள் கொண்ட ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் அது பெரும்பாலும் வாக்கெடுப்புக்கு விடப்படும் என்றே தோன்றுகின்றது.**

**இதற்கிடையில் –**

***“நட்பு நாடுகளின் ஆதரவுடன் ஜெனிவாச் சவாலை நாம் முறியடித்தே தீருவோம், புதிய பிரேரணையையும் வலுவிழக்கச் செய்வோம்”* – என்று சூளுரைத்திருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.**

***“ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் இலங்கைக்கு ஆதரவு வழங்குமாறு கோரி கடிதம் எழுதியுள்ளேன். எமது நட்பு நாடுகள் இலங்கையை ஒருபோதும் காட்டிக் கொடுக்கா. அவை இலங்கைக்கு ஆதரவு வழங்கும் என உறுதியான நம்பிக்கையுடன் இருக்கிறோம்”* – என்று ஆளும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மத்தியில் கூறியிருக்கின்றார் அவர். நல்லது.**

**அதாவது, ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் அங்கத்துவம் வகிக்கும் 47 நாடுகளில் ஒரு தொகுதியைத் தமது நட்பு நாடுகள் என அவர் அடையாளப்படுத்துகின்றார்.**

**அப்படிப் பார்த்தால் இலங்கையின் செயற்போக்கை விசனிக்கும் விதத்தில் சமர்ப்பிக்கப்படும் பிரேரணையை எதிர்க்கின்ற நாடுகள் இலங்கையின் நேச – நட்பு – நாடுகள்.**

**எனின், இந்தப் பிரேரணையை சமர்ப்பிக்கும் பிரிட்டன், ஜேர்மன், கனடா உட்பட்ட நாடுகளும், மனித உரிமைகள் கவுன்ஸிலில் அப் பிரேரணையை ஆதரிக்கக் கூடிய நாடுகளும், கவுன்ஸிலில் அங்கத்துவம் பெறாமல் இந்தப் பிரேரணைக்கு ஆதரவும் ஊக்கமும் தந்து நிற்கும் அமெரிக்க போன்ற பிற நாடுகளும் இலங்கைக்கு என்ன எதிரி நாடுகளா?**

**நட்பு நாடுகள் தங்களைக் கைவிடா என்ற கூற்றின் மூலம் சர்வதேச ஊடாட்டக் களப்பரப்பில் தமக்குக் காத்திரமான எதிரி நாடுகளைத் தாங்கள் உருவாக்கி வைத்துள்ளனர் என்பதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே ஒப்புக் கொள்கின்றாரா?**

**அவர் கூறும் இன்னொரு விடயம் மிக ஆபத்தானது. அவரிலும், அவரது அரசிலும், ஆட்சிப் பீடத்திலும் ஆழமாகப் புதைந்து கிடக்கும் பேரினவாதத்தின் வெளிப்பாடாகவே இந்தக் கருத்தை நோக்க வேண்டும்.**

***“எமது நட்பு நாடுகள் இலங்கையை ஒருபோதும் காட்டிக் கொடுக்கா. ஆனால் எமது நாட்டில் உள்ள தமிழ்க் கட்சியினர் உள்ளிட்ட எதிரணியினர் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் துரோக நடவடிக்கையில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். ஆனால் இந்த நடவடிக்கை ஒருபோதும் வெற்றி பெறாது. நட்பு நாடுகளின் ஆதரவுடன் ஜெனிவாச் சவாலை முறியடிப்போம்”* என்று அவர் கூறியிருக்கிறார்.**

**யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தமிழர்கள் – அப்பாவி மக்கள் – வகை தொகையின்றி கொல்லப்பட்டனர். பல்லாயிரம் பேர் கொலையான இந்த அவலத்தில் யுத்தக் குற்றங்கள் தாராளமாக அரங்கேறின; மனித உரிமைகள் மோசமாக மீறப்பட்டன; மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் பெருமளவில் இழைக்கப்பட்டன.**

**தங்களுக்கு எதிராக பௌத்த, சிங்களப் பேரினவாத ஆட்சிப் பீடத்தினால் பேரினவாத மேலாண்மை திமிரில் அரங்கேற்றப்பட்ட இனவழிப்புக்கு நீதியான விசாரணை நடத்தி, உண்மைகளைக் கண்டறிந்து, பொறுப்புக் கூறலை நிலைநாட்டி, பாதிப்புற்றோருக்கு உரிய இழப்பீடுகளை வழங்கி, மீள நிகழாமையை உறுதிப்படுத்துமாறே தமிழர்கள் – இந்த இலங்கைத் தீவின் சுதேசிகள் – கோருகின்றனர். அந்தக் கோரிக்கையை அடியொட்டியதாகவே இப்போது ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் மீண்டும் ஒரு பிரேரணை வருகின்றது.**

**பேரினவாத இனவழிப்புக் கொடூரத்தை இழைத்த தரப்புகள், அதனால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்கள், அந்த கொடூரங்களுக்கு நியாயம் கேட்பதை நாட்டைக் காட்டிக் கொடுக்கும் செயலாக விபரீதமாக அர்த்தப்படுத்துகின்றன.**

**உண்மையில், நாட்டின் மக்களையும், படைகளையும் அத்தகைய குரூர வழியில் நெறிப்படுத்தி, மனித குலத்துக்கு எதிரான கொடூரங்களை இழைக்கத் தூண்டி, அவற்றைச் செய்வித்து, அந்த குற்றங்களை மூடி மறைத்து, நாட்டின் நற்பெயரையே ‘அரச பயங்கரவாதம்’ என்ற மனித நாகரிகத்துக்கு முரணான மிலேச்சத்தனமான நடவடிக்கைகளால் கெடுத்த ஆட்சியாளர்களே, உண்மையில் இலங்கைத் தீவைக் காட்டிக் கொடுத்தவர்களாவர். அந்தக் காட்டிக் கொடுப்பை மூடி மறைக்க முயலும் – கொடூரங்களுக்குத் துணைபோகும் – அறவிரோதச் செயற்பாட்டையே கோட்டாவின் நட்பு நாடுகள் முன்னெடுக்கின்றன. அதுதான் உண்மை.**

# இலங்கைக்கு எதிராக இந்தியா செயற்படாது!

## பீரிஸ் இமாலய நம்பிக்கை



ஜெனிவா விவகாரத்தில் இலங்கைக்கு எதிராக இந்தியா ஒருபோதும் செயற்படாது என அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

ஜெனிவா விவகாரத்தில் இந்தியா இலங்கைக்கு ஆதரவளிக்கும் என்றும் அதற்கான அவசியம் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை வரையறைக்கு உட்பட்டு செயற்பட வேண்டும் என்றும் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நாட்டின் உள்ளக விவகாரத்தில் தலையிடவும் இலங்கைக்கு எதிராக செயற்படவும் மனித உரிமை ஆணையாளருக்கு அதிகாரமில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

# சிறுபான்மை சமூகங்களினது கலாசார மத அடையாளத்தை அழிக்க முயற்சி!

## அன்டோனியோ குட்ரெஸ்



உலகம் முழுவதும் சிறுபான்மை சமூகங்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள நிலையில் அவர்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்த வேண்டும் என ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்ரெஸ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடர் நேற்று திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமாகிய நிலையில் முதல்நாள் அமர்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

மனித நல்வாழ்வுக்கு பல்லுயிர் அடிப்படை என்பது போல, சமூகங்களின் பன்முகத்தன்மையும் மனிதகுலத்திற்கு அடிப்படை என்பதை சுட்டிக்காட்டிய அவர் –

அனைத்து சமூகங்களினதும் மத மற்றும் பாரம்பரிய ரீதியான தனித்துவ அடையாளங்களைப் பாதுகாப்பதற்கும் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதற்கும் ஏற்றவகையிலான கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இருப்பினும், சிறுபான்மை சமூகங்களின் கலாசார மற்றும் மத அடையாளத்தை அழிக்க முற்படும் செயற்பாடுகளையும் தாம் அவதானிப்பதாக அன்டோனியோ குட்ரெஸ் தெரிவித்தார்.

சிறுபான்மை சமூகத்தின் கலாசாரம், மொழி அல்லது நம்பிக்கை தாக்குதலுக்கு உள்ளாகும் போதும் பாதுகாப்பு என்ற போர்வையில் அவர்களை சந்தேகத்துடன் நோக்கும்போதும் அனைவரும் அச்சுறுத்தப்படுகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நடவடிக்கைகள் பின்னடைவுக்கு வித்திடுகின்றன எனவும் சுட்டிக்காட்டிய அன்டோனியோ குட்ரெஸ், மனித உரிமைகள், மத, கலாசார மற்றும் தனித்துவமான மனித அடையாளத்தை முழுமையாக மதிக்கும் கொள்கைகளுக்கு தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

# இந்தியாவின் அனுசரணை இல்லாமல் பிரச்சினைக்குத் தீர்வு சாத்தியமில்லை!

## ஜனநாயக போராளிகள் கட்சி தெரிவிப்பு

இந்தியாவின் அனுசரணையில்லாது ஈழத் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு, இலங்கைத் தீவில் சாத்தியமில்லை என ஜனநாயக போராளிகள் கட்சியின் பொதுச்செயலாளர் இ.கதிர் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இ.கதிர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகி உள்ளது. இந்த நிலையில் கடந்த காலங்களில் ஐ.நாவால் முன்வைக்கப்பட்ட சில விடயங்கள் தொடர்பாகத் தமிழ் மக்கள் ஒரு பெரிய எதிர்பார்ப்போடு இருக்கின்றார்கள்.

இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் தொடர்பில் ஐ.நாவினுடைய போர்க்குற்ற நீதிமன்றத்தில் இலங்கை அரசாங்கத்துக்கான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்ற நம்பிக்கையோடு எமது மக்கள் எதிர்பார்ப்போடு இருக்கின்றார்கள்.

ஆனால் அவ்வாறான சூழல் தற்போது அமையவில்லை. ஐ.நாவினுடைய நிலையில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. முதலாவது வரைபிலேயே இலங்கைக்கு எதிரான சில விடயங்கள் குறிப்பிடப்படவில்லை. ஏனென்றால் தற்போதைய சூழ்நிலையில் எமது மக்களுடைய எதிர்பார்ப்பு என்பது இலங்கையை ஒரு குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டு சென்று அங்கு சரியான முறையில் உண்மைகள் விசாரிக்கப்பட்டு, எமது மக்களுக்கான நீதி கிடைக்க வேண்டும் என்பதுதான்.

ஐ.நாவினுடைய பொதுச்சபை ஒன்றுகூடி இருக்கின்ற இந்நாளிலே நாங்கள் இந்தக் கருத்தை முன் வைக்கின்றோம். எதிர்காலத்தில் தொடர்ந்தும் இவ்வாறான ஒரு மந்தநிலை இருந்தால் இலங்கை அரசு பயங்கரவாத செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக செய்யக் கூடிய நிலை காணப்படுகின்றது.

அந்தவகையில் பன்னாட்டு சமூகம் எமது மக்களுடைய நீதிக்காக செயற்பட வேண்டும். உண்மையிலேயே இந்தியாவினுடைய அனுசரணை எமது மக்களுக்குத் தேவையாக இருக்கின்றது.

இந்தியாவினுடைய அங்கீகாரம் எமக்குக் கிடைக்குமாக இருந்தால் உலகமும் நமது பக்கம் திரும்பிப் பார்க்கும் அத்தோடு எமது மக்களுடைய நியாயமான பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வரும் என எதிர்பார்க்கின்றோம்.

குறித்த சூழ்நிலை தற்போது உருவாகி இருக்கின்றது. அண்மையில் தமிழ் நாட்டுக்கு விஜயம் மேற்கொண்ட இந்தியாவின் பிரதமர், ஈழத் தமிழர்களுக்கான உரிமை தொடர்பாகக் குரல் கொடுத்திருக்கின்றார். தொடர்ந்தும் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தங்களைக் கொடுப்பதாகக் கூறி இருக்கிறார்.

அவருக்கு நாங்கள் எமது மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவிப்பதோடு, உண்மையிலே இந்தியாவினுடைய அனுசரணை இல்லாமல் ஈழத்தமிழர்களுக்கான பிரச்சினைக்கு தீர்வு இலங்கைத் தீவிலே சாத்தியமில்லை என்பதை எமது மக்களுக்கு அன்போடு எடுத்து கூறுகிறோம்.– என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இந்தியா, சீனா படைகள் வாபஸ் அமெரிக்கா வரவேற்பு தெரிவிப்பு



லடாக் எல்லையில் இந்திய பகுதிக்குள் சீன ராணுவம் ஊடுருவியதால் கடந்த ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி இருதரப்பு இராணுவத்துக்கு இடையே கல்வான் பள்ளத்தாக்கு பகுதியில் மோதல் ஏற்பட்டது. இதில் இந்திய தரப்பில் 20 வீரர்களும், சீனா தரப்பில் சுமார் 35 பேரும் உயிரிழந்தனர். இதனால் எல்லையில் இருதரப்பும் படைகளை குவித்தன. எனவே இருநாட்டு எல்லையில் போர் பதற்றம் அதிகரித்தது.

இதற்கு மத்தியில் அமைதியை நிலைநாட்டுவதற்காக இருதரப்பும் பேச்சுக்களையும் தொடர்ந்தன. அந்தவகையில் இருநாட்டு லெப்டினன்ட் ஜெனரல் மட்டத்தில் நடந்த பேச்சுகளில் சுமுக முடிவு எட்டப்பட்டது. எல்லையில் பதற்றத்துக்குரிய பகுதிகளில் இருந்து இருதரப்பும் படிப்படியாக படைகளை விலக்குவது எனவும், எல்லையில் அமைதியை மீண்டும் ஏற்படுத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

எனினும், கிழக்கு லடாக்கில் அசல் எல்லை கட்டுப்பாட்டு கோடு பகுதியில் சீனா தொடர்ந்து அத்துமீறி வந்ததால், இந்திய படைகள் பதிலடி கொடுக்க நேரிட்டது. இரு தரப்பும் படைகளையும், தளவாடங்களையும் தொடர்ந்து குவித்ததால் அங்கு போர்ப்பதற்றம் நிலவி வந்தது. அங்கு அமைதியையும், சமாதானத்தையும் மீண்டும் ஏற்படுத்துவதற்காக இரு தரப்பிலும் ராணுவம் மற்றும் தூதரக மட்டத்தில் தொடர் பேச்சுவார்த்தைகள் நடந்தன.

இதற்கிடையே, இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகள் இடையே தளபதிகள் மட்டத்திலான 10 ஆவது சுற்று பேச்சு கடந்த 2 நாள்களுக்கு முன் மோல்டோ என்ற இடத்தில் அமைந்த சீன தரப்பு அசல் கட்டுப்பாட்டு கோடு பகுதியில் நடைபெற்றது.

பாங்கோங் ஏரியின் வடக்கு மற்றும் தெற்கு கரை பகுதிகளில் இருந்து படைகளை இரு தரப்பினரும் வாபஸ் பெற்ற பின்னர், மோதல் ஏற்படும் வகையிலான பிற பகுதிகளில் இருந்து படைகளை வாபஸ் பெறுவது பற்றி இரு நாட்டினரும் ஆலோசனையில் ஈடுபடு ள் என இந்திய இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்நிலையில், லடாக் எல்லையின் ஒரு பகுதியில் இருந்து படைகளை வாபஸ் பெறும் பணியில் இந்தியா மற்றும் சீனா நாடுகள் ஈடுபட்டு அதனை நிறைவு செய்தன.

இதுதொடர்பாக, அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தி தொடர்பு அதிகாரி நெட் பிரைஸ் கூறியதாவது:-

எல்லை பகுதியில் பதற்ற சூழ்நிலையை தவிர்க்கும் வகையில் இந்தியா மற்றும் சீனா நாடுகள் எடுத்து வரும் முயற்சிகளை நாங்கள் வரவேற்கிறோம். படைகள் வாபஸ் பற்றிய அறிவிப்புகளை நாங்கள் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம்.

அமைதியான தீர்வு காணப்படுவதற்கான பணியில் இரு தரப்பினரும் ஈடுபட்டு வருவதனை நாங்கள் தொடர்ந்து கண்காணித்து வருவோம்.

கொரோனா பெருந்தொற்று தொடக்க காலத்தில் இருந்தே இந்திய மருந்து தொழிற்சாலையுடன் இணைந்து அமெரிக்க மருந்து தொழிற்சாலை பணியாற்றி வருகிறது என்பதில் நாங்கள் மகிழ்ச்சி கொள்கிறோம் என தெரிவித்தார்.

## கல் உடைக்கும் ஆலையில் வெடிவிபத்து 5 பேர் உயிரிழப்பு; பிரதமர் மோடி இரங்கல்



கர்நாடக மாநிலம் சிக்க பல்லபூர் மாவட்டம் ஹிரங் காவல்லியில் உள்ள கல் உடைக்கும் ஆலையில் நேற்று இரவு பயங்கர வெடி விபத்து நிகழ்ந்தது. இதில் 6 பேர் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்துள்ளார். விபத்து குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சட்டவிரோதமாக பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஜெலட்டின் குச்சிகள் உள்ளிட்ட வெடிபொருள்கள் வெடித்து விபத்து ஏற்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. இதுபற்றி விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று கனிமவளத்துறை அமைச்சர் முருகேஷ் நிரானி கூறினார். கர்நாடக உள்துறை அமைச்சர் பசவராஜ் பொம்மை சம்பவ இடத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிலையில், கல் உடைக்கும் ஆலை விபத்தில் உயிரிழந்த 6 பேரின் குடும்பங்களுக்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். விபத்தில் காயமடைந்தவர் விரைவில் குணமடைய பிரார்த்தனை செய்வதாகவும் அவர் கூறி உள்ளார்.

## உலக அளவில் கொரோனா பாதிப்பு 11.22 கோடியை கடந்தது செல்கிறது



சீனாவின் வுகான் நகரில் வெளிப்பட்ட கொரோனா வைரஸ் உலக நாடுகளை உலுக்கி வருகிறது. வைரஸ் தொற்றுப் பரவி ஏறத்தாழ 12 மாதங்கள் கடந்து விட்டாலும் இதன் வீரியம் குறைந்தபாடில்லை.

இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிப்பு அடைந்தோர் எண் ணிக்கை 11 கோடி 22 லட்சத்தைக் கடந்துள்ளது. கொரோனா பாதிப்பில் இருந்து இதுவரை 8கோடி 77 லட்சத்துக்கும் அதிகமானோர் குணமடைந்துள்ளனர்.

மேலும் வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 24 லட்சத்து 84 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

வைரஸ் பரவியவர்களில் 2 கோடி 19 லட்சத்துக்கும் அதிகமானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 93 ஆயிரத்து இருநூறுக்கும் மேற்பட்டோரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

கொரோனா பாதிப்பு அதிகமுள்ள நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா, இந்தியா, பிரேசில், ரஷ்யா, பிரிட்டன் ஆகியவை முதல் 5 இடங்களில் உள்ளன.

## அயோத்தியில் கட்டப்படும் விமான நிலையத்துக்கு ராமர் பெயர் சூட்ட முடிவானதாக அறிவிப்பு



உத்தரபிரதேச மாநிலம் அயோத்தியில் ராமர் கோவிலும், மசூதியும் கட்டப்பட்டு வரும் நிலையில், அங்கு அதிகரிக்கப்போகும் பக்தர்கள் வரத்தை கருத்தில்கொண்டு விமான நிலையம் கட்டப்பட்டு வருகிறது. அதை பின்னர் சர்வதேச விமான நிலையமாக தரம் உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், உத்தரபிரதேச சட்டசபையில் 2021.22 ஆம் நிதியாண்டுக்கான பட்ஜெட்டை நிதி அமைச்சர் சுரேஷ் கன்னா நேற்று தாக்கல் செய்தார்.

அதில், அயோத்தியில் கட்டப்பட்டுவரும் விமான நிலையத்துக்கு ரூ.101 கோடி ஒதுக்கீடு செய்யப்படுவதாகவும், அதற்கு 'மரியாதா புருஷோத்தம் ஸ்ரீராம் விமான நிலையம்' என்று பெயர் சூட்டப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானின் விமானம் இந்திய வான் பரப்பை பயன்படுத்த அனுமதிப்பு



*பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் பயணிக்கும் விமானம், இலங்கை வருவதற்காக இந்திய வான் பரப்பை பயன்படுத்த இந்திய அரசு அனுமதி அளித்துள்ளது.*

*இந்திய வான் பரப்பு வழியாக இம்ரான்கானின் விமானம் பயணிப்பதற்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.*

*2019 ஆம் ஆண்டு அமெரிக்கா மற்றும் சவுதி அரேபியாவுக்கு பிரதமர் மோடி விமானத்தில் சென்ற போது, காஷ்மீர் பிரச்சினையைச் சுட்டிக்காட்டி பாகிஸ்தான் வான்பரப்பை பயன்படுத்திக் கொள்ள இம்ரான் கான் அரசு அனுமதி மறுத்து விட்டது.*

*இந்த விவகாரத்தை சர்வதேச விமானப் போக்குவரத்து அமைப்பிடம் இந்தியா முறையிட்டமை குறிப்பிடத்தக்கது.*

## கொவேக்சினின் 3 ஆம் கட்ட சோதனை முடிவுகள் விரைவில் வெளியாகும்

முற்றிலும் இந்தியாவிலேயே கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா தடுப்பூசியான கோவாக்சினின் 3 ஆம் கட்ட சோதனை முடிவுகள் இரண்டு வாரத்தில் வெளியாகும் என பாரத் பயோடெக் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் கிருஷ்ணா எல்லா தெரிவித்துள்ளார்.

இரண்டு மற்றும் மூன்றாம் கட்ட சோதனைகளை ஒன்றாக சேர்த்து நடத்தியிருந்தால் கொவெக்சினின் திறன் திட்டமிட்டபடி நிரூபிக்கப்பட்டிருக்கும் என்ற அவர், சில காரணங்களால் அது நடக்காமல் போய் விட்டது என்றார். கொவெக்சின் தடுப்பூசி, தென்னாபிரிக்க மரபணு மாற்ற வைரஸையும் கட்டுப்படுத்தும் வகையில் தயாரிக்கப்படுவதாக அவர் கூறினார்.

அனைத்து சோதனைகளிலும் வெற்றி பெற்ற சீரம் இந்தியாவின் கொவிஷீல்டு தடுப்பூசிக்கு அவசரகால ஒப்புதல் வழங்கப்பட்ட கடந்த ஜனவரி 3 ஆம் திகதியே கொவெக்சினுக்கும் அரசு ஒப்புதல் வழங்கியது. ஆனால் 3 ஆம் கட்ட சோதனை நடக்காமல் ஒப்புதல் வழங்கப்பட்டது சர்ச்சையை ஏற்படுத்தியது.



# மியன்மாரில் ராணுவ ஆட்சியை கண்டித்து நாடு தழுவிய முழு அடைப்பு போராட்டம்




மியன்மார் நாட்டில் கடந்த சனிக்கிழமை மாண்டலே நகரில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 2 பேர் பலியாகினர். இது போராட்டக்காரர்கள் மத்தியில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில் இராணுவ ஆட்சியை கண்டித்து நேற்று நாடு தழுவிய முழு அடைப்பு போராட்டம் நடத்த அழைப்பு விடுக்கப்பட்டது.

இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த இராணுவம் முழு அடைப்பு போராட்டத்தில் பங்கேற்றால் உயிர் இழப்புகள் ஏற்படலாம் என பகிரங்க எச்சரிக்கை விடுத்தது.

ஆனாலும் இராணுவத்தின் இந்த எச்சரிக்கையை மீறியும் மியன்மாரில் நேற்று முழு அடைப்பு போராட்டம் நடைபெற்றது. நாடு முழுவதும் தொழிற்சாலைகள், வணிக நிறுவனங்கள், கடைகள் அடைக்கப்பட்டன. மேலும் வழக்கம்போல் ஆயிரக்கணக்கான மக்கள் வீதியில் இறங்கி போராட்டமும் நடத்தினர்.

போராட்டக்காரர்களை அச்சுறுத்தும் விதமாக எங்கு பார்த்தாலும் ஒரு ராணுவ டாங்கிகள் அணிவகுத்து சென்றன. ஆனாலும் போராட்டக்காரர்கள் அதனைப் பொருட்படுத்தாமல் இராணுவ ஆட்சிக்கு எதிராக கண்டன கோஷங்கள் எழுப்பியபடி சாலைகளில் பேரணியாக சென்றனர்.



# அவசர சுகாதார சட்டத்தினை எதிர்த்து பொலிவியாவில் மக்கள் போராட்டம்

பொலிவியாவில் போராட்டத்தில் ஈடுபட்ட சுகாதாரப் பணியாளர்களுக்கும் காவல்துறையினருக்கும் இடையே மோதல் மூண்டது.

பொலிவியா அதிபர் லூயிஸ் அர்ஸ் (Luis Arce), கடந்த 17 ஆம் திகதி அவசர சுகாதார சட்டத்தில் கையெழுத்திட்டார். இச்சட்டம் வெளிநாட்டு மருத்துவ பணியாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க வழி செய்வதாக கூறியும், உடனடியாக அவசர சட்டத்தை திரும்ப பெற வலியுறுத்தியும் தலைநகர் லா பாஸில் திரண்ட மருத்துவப் பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்களை ஒடுக்க முயற்சித்த பொலிஸார் மீது போராட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தினர்.

# பிரபல போதைப்பொருள் கடத்தல் மன்னனான எல் - சாப்போவின் மனைவி அமெரிக்காவில் கைது

மெக்சிக்கோவைச் சேர்ந்த, பிரபல போதைப்பொருள் கடத்தல் மன்னன் எல் சாப்போவின் மனைவி அமெரிக்காவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

உலகின் மிகப் பயங்கரமான போதைப் பொருள் கடத்தல் கும்பல்களில் ஒன்று சினோலா கார்ட்டெல். இதன் தலைவன் எல் – சாப்போ, 25 ஆண்டுகளில் கொக்கைன் உள்ளிட்ட போதைப்பொருள்களை மலை மலையாக அமெரிக்காவுக்கு கடத்தியுள்ளார்.


கடத்தலில் மட்டுமல்ல தப்பிச் செல்லும் கலையிலும் மன்னனான எல் – சாப்போ, கைது செய்யப்பட்டு, அமெரிக்காவில் சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறார்.



இந்நிலையில், போதைப்பொருள் கடத்தலுக்கு உதவிய குற்றச்சாட்டில் எல் சாப்போவின் மனைவி எம்மா அய்ஸ்ப்ரோ (Emma Coronel Aispuro) விர்ஜீனியாவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

# மியன்மார் விவகாரத்தைக் கையாள அதிகாரிகளை நியமித்தது அமெரிக்கா

மியன்மார் அரசியல் நிலைவரத்தை கண்காணிக்கவும் ஜனநாயகத்தை மீட்கவும் இரண்டு சிறப்பு அதிகாரிகளை அமெரிக்கா நியமித்துள்ளது.



இதுகுறித்து செய்தியாளர்களிடம் விளக்கிய அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆன்டனி பிளிங்கென் பர்மா மக்களுடன் அமெரிக்கா தோள் கொடுத்து நிற்பதாக தெரிவித்தார்.

மக்களின் விருப்பத்துக்கு மாறாக அதிகாரத்தைக் கைப்பற்றி வன்முறையைத் தூண்டிவிடும் இராணுவ சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக அமெரிக்கா கடுமையானநடவடிக்கைகள்மேற்கொள்ளும் என்றும் பிளிங்கென் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவில் கொரோனாவால் இறந்தவர்களுக்கு அடுத்த ஐந்து நாள்களுக்குத் துக்கம் அனுஷ்டிப்பு!



*அமெரிக்காவில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக அடுத்த 5 நாள்களுக்கு துக்கம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.*

*அமெரிக்காவில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 5 லட்சத்தை தாண்டியுள்ளது.*

*கொரோனாவால் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக வெள்ளை மாளிகை முழுவதும் மெழுகுவர்த்தி ஏற்றி, அதிபர் பைடன், அவரது மனைவி ஜில் பைடன், துணை அதிபர் கமலா ஹாரிஸ் மற்றும் அவரது கணவர் டக் எம்ஹாப் ஆகியோர் சில நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர்.*

# ஆஸி. செய்தி பக்கங்கள் மீதான தடையை விலக்கி ஊடகங்களுக்கு பணம் வழங்க பேஸ்புக் சம்மதம்

ஊடக விதிகளை திருத்தி அமைக்க ஆஸ்திரேலிய அரசு ஒப்புக்கொண்டதை தொடர்ந்து பேஸ்புக் நிறுவனம், ஆஸ்திரேலிய செய்தி பக்கங்கள் மீது விதித்த சர்ச்சைக்குரிய தடையை விலக்கிக் கொள்ளப்போவதாக அறிவித்துள்ளது.

பேஸ்புக் போன்ற சமூக வலைத் தளங்களில் ஷேர் செய்யப்படும் செய்திகளுக்கு பேஸ்புக் நிறுவனம் செய்தி நிறுவனங்களுக்கு பணம் செலுத்துவது சட்ட பூர்வ கட்டாயம் என்ற ஆஸ்திரேலிய அரசின் விதிகளுக்கு பேஸ்புக் கடும் எதிர்ப்பு தெரிவித்து தடை நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

இந்த நிலையில் இருதரப்பும் பேசி சுமுகமான முடிவு எட்டப்பட்டுள்ளதால், பொதுநலன் சார்ந்த ஊடக செய்திகள் இனி பேஸ்புக்கில் வெளியாகும் என அதன் ஆஸ்திரேலிய பிரிவு தெரிவித்துள்ளது.

கூகுள் நிறுவனம் ஏற்கனவே தனது நிலையில் இருந்து இறங்கி வந்து, ஊடக செய்திகளுக்கு பணம் வழங்க தயார் என தெரிவித்துள்ளது.

இப்போது எட்டப்பட்டுள்ள உடன்பாட்டின்படி, பேஸ்புக்கும், கூகுளும், தங்களது தளத்தில் வெளியாகும் செய்திகளுக்கு உள்ளூர் ஊடக நிறுவனங்களுக்கு பணம் செலுத்தும்.

# சீன அரசமைப்பைக் கறை படுத்துவதை நிறுத்துங்கள் அமெரிக்காவிடம் சீன வெளியுறவு அமைச்சர் கோரிக்கை

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்பின் 4 ஆண்டு பதவிக் காலத்தில் அமெரிக்கா சீனா இடையிலான உறவு முன்னெப்போதும் இல்லாத வகையில் மோசமடைந்தது.

வர்த்தக போர், தென் சீன கடல் விவகாரம், உய்குர் இன முஸ்லிம்கள் மீதான அடக்குமுறை, என ஒவ்வொன்றாக இரு நாடுகளின் உறவை பலவீனமாக்கிய நிலையில் கொரோனா வைரஸ் பிரச்சினை இரு நாடுகளுக்கு இடையில் தீரா பகையை உருவாக்கியது.

இந்த சூழலில் அமெரிக்காவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு புதிய ஜனாதிபதியாக ஜோ பைடன் பதவியேற்றுள்ளார். இவரது நிர்வாகத்தின் கீழ் அமெரிக்கா சீனா இடையிலான உறவில் மாற்றம் ஏற்படுமா என்ற கேள்வி உள்ளது.

இந்த நிலையில் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்ற பிறகு ஜோ பைடன் கடந்த 11 ஆம் திகதி சீன அதிபர் ஜின்பிங்கை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

அப்போது சீனாவின் நியாயமற்ற பொருளாதார செயற்பாடுகள், ஹொங்கொங்கில் தேசிய பாதுகாப்பு சட்டம் கொண்டு வந்து, ஜனநாயக ஆர்வலர்களை ஒடுக்கும் நடவடிக்கைகள், சின்ஜியாங்கில் உய்குர் இன மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் மனித உரிமை மீறல்கள் உள்ளிட்டவற்றில் ஜோ பைடன் தனது கவலையை வெளிப்படுத்தினார்.

அதன் பின்னர் இந்த பேச்சு குறித்து ஜோ பைடன் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில் சீனாவில் மனித உரிமை மீறல்களுக்கு விளைவுகள் இருக்கும் எனக்கூறி சீனாவுக்கு மறைமுகமாக எச்சரிக்கை விடுத்தார்.

இந்த நிலையில் அமெரிக்கா சீனா உறவுகளில் கவனம் செலுத்துவது தொடர்பான சீன வெளியுறவு அமைச்சகத்தின் வருடாந்த மாநாடு தலைநகர் பீஜிங்கில் நேற்று நடந்தது.

இதில் அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சர் வாங் யி கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது:–

முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் சீனாவை நோக்கி முன்வைத்த கடுமையான கொள்கைகளை ஜோ பைடன் நிர்வாகம் சரி செய்ய வேண்டும். அமெ



ரிக்காவை சவால் செய்யவோ அல்லது மாற்றவோ எங்களுக்கு விருப்பமில்லை. அமைதியான சகவாழ்வு மற்றும் அமெரிக்காவுடன் பொதுவான வளர்ச்சியை நாட நாங்கள் தயாராக உள்ளோம்.

அதேபோல் அமெரிக்காவும் சீனாவின் முக்கிய நலன்கள் தேசிய கௌவுரவம் மற்றும் வளர்ச்சிக்கான உரிமைகளை மதிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

சீன கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சீன அரசமைப்பை கறை படுத்துவது; தாய்வானின் பிரிவினைவாத சக்திகளின் தவறான சொற்களையும் செயல்களையும் ஆதரிப்பது, ஹொங்கொங், திபெத் மற்றும் சின்ஜியாங் தொடர்பான விவகாரங்களில் சீனாவின் இறையாண்மையும் பாதுகாப்பையும் குறை மதிப்புக்கு உட்படுத்துவது ஆகியவற்றை அமெரிக்கா நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

சீனாவின் பொருள்களின் மீதான நியாயமற்ற கட்டணங்களை நீக்குவது, சீனாவின் வர்த்தக நிறுவனங்கள் ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனங்கள் மீதான ஒருதலைப்பட்ச பொருளாதார தடைகளை நீக்குவது, சீனாவை பகுத்தறிவற்ற முறையில் அடக்குவதை கைவிடுவது ஆகியவற்றுடன் அமெரிக்கத் தரப்பு தனது கொள்கைகளை சீக்கிரம் சரி செய்யும் என்று நம்புகிறோம்.– என்று அவர் பேசினார்.

# சம்பந்தனின் அரசியல் யோசனை நிறைவேற்றமுடியாத நிராசையே!

## திஸ்ஸ விதாரண இப்படிக் கூறுகிறார்



புதிய அரசமைப்பின் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். தேசிய பாதுகாப்புக்கும் நாட்டின் இறையாண்மைக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் தமிழர் தரப்பினரது கோரிக்கைகள் காணப்பட வேண்டும்.

புதிய அரசமைப்பு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் யோசனை, முரண்பாடுகளை தோற்றுவிப்பதுடன் நிறைவேறாத நிராசைகளுள் ஒன்றாகவே காணப்படுகிறது என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் லங்கா சமசமாஜ கட்சி கூட்டணியமைத்துள்ளது. கூட்டணிக்குள் உள்ள கட்சிகள் தனிப்பட்ட முறையிலும், கூட்டணி அடிப்படையிலும் புதிய அரசமைப்பு தொடர்பில் தமது கட்சி நிலைப்பாட்டை முன்வைத்துள்ளார்கள். லங்கா சமசமாஜ கட்சி சார்பில் கூட்டணியின் ஊடாக யோசனைகளை முன்வைத்துள்ளோம்.

புதிய அரசமைப்பில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். என்று புதிய அரசமைப்பு தொடர்பான யோசனையில் சுட்டிக்காட்டியுள்ளோம். தேசிய பாதுகாப்புக்கும், இறையாண்மைக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் தமிழ்த் தலைமைகள் யோசனைகளை முன்வைக்க வேண்டும்.

புதிய அரசமைப்பு தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் முன்வைத்துள்ள யோசனை முரண்பாட்டை தோற்றுவிக்கும் வகையில் காணப்படுகிறது. நடைமுறைத் தன்மைக்கு சாத்தியப்படாத வகையில் யோசனைகளை முன்வைப்பதால் தமிழ் மக்களுக்கு ஏதும் நன்மை கிடைக்கப்பெறாது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். முரண்பாடற்ற வகையில் பெற்றுக்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

இனங்களுக்கு மத்தியில் தற்போதும் காணப்படும் இனப்பிரச்சினைக்கு புதிய அரசமைப்பின் ஊடாகத் தீர்வு காண்பது கட்டாயமாகும். இதற்கு சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் அறிக்கையை முழுமையாகச் செயற்படுத்த வேண்டும் என்பதை சர்வக்கட்சி குழுவின் தலைவராக செயற்பட்டவர் என்ற ரீதியில் குறிப்பிட்டுள்ளேன். சர்வக்கட்சி குழு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரது பங்குபற்றல் இல்லாமல் சுமார் இரண்டரை வருட காலமாகப் பல தரப்பு மட்டத்தில் பேச்சுகளை முன்னெடுத்து அறிக்கை தயாரித்தது. அரசியல் மாற்றத்தைத் தொடர்ந்து அவை கவனத்திற்கொள்ளப்படாமல் போனமை கவலைக்குரியது.

ஆகவே, புதிய அரசமைப்பின் ஊடாக தேசிய நல்லிணக்கம் உறுதிப்படுத்த வேண்டுமாயின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை அனைத்து தரப்பினரும் புரிந்துகொள்ள வேண்டும். தமிழ்த் தலைமைகள் தற்போது ஒரு சில விடயங்களில் விட்டுக் கொடுப்புடன் செயற்பட்டு தீர்வு காண ஒன்றிணைய வேண்டும். - என்றார்.



## எழுதுமட்டுவாழில் கோர விபத்து!

யாழ் கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எழுதுமட்டுவாழ் பகுதியில் பார ஊர்தி ஒன்று விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்து சம்பவம் இன்று (செவ்வாய்க்கிழமை) காலை 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

யாழ் நோக்கி பயணித்த இரு வாகனங்கள் மோதிக்கொண்டதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. முன்னே பயணித்த உழவு இயந்திரம் சடுதியாக நிறுத்த முயற்சிக்கப்பட்டமையால் அதன் பின்னால் பயணித்த பார ஊர்தி மோதியுள்ளது.

இதன்போது வாகனம் தடம்புரண்டுள்ளது. எனினும் குறித்த விபத்தில் பாரிய சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## 207 இலங்கையர் நாடு வந்தடைவு!

தொழில்வாய்ப்புக்காக கட்டாருக்கு சென்று பல்வேறு நெருக்கடிகளுக்குள்ளான 207 இலங்கையர்கள் இன்று அதிகாலை நாடு திரும்பியுள்ளனர்.

அதன்படி இவர்கள் அதிகாலை 5.25 மணிக்கு ஸ்ரீலங்கன் ஏயர்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான விமானத்தின் மூலமாக கட்டாரின் டோஹாவிலிருந்து கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் பணிப்பெண்களாக கட்டார் சென்றவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விமான நிலையத்தை வந்தடைந்த இவர்கள் அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டமையுடன், இலங்கை இராணுவத்தினரால் தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்காகவும் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இலங்கை அரசாங்கத்தின் திருப்பி அனுப்பும் விசேட திட்டத்தின் கீழ் இவர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பில் நள்ளிரவில் இளம் பெண்ணொருவர் கடத்தல்!

மட்டக்களப்பு ஆரையம்பதி பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் வெள்ளைவான் ஒன்றில் சென்ற நான்கு பேர் கொண்ட குழுவினர் யுவதியொருவரைக் கடத்திச் சென்றுள்ளனர் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கடத்தலில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவர் தலைமையிலான குழுவினரே ஈடுபட்டனர் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த பெண்ணின் வீட்டுக்கு இன்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை சென்ற இந்தக்குழு, வீட்டை உடைத்து, நித்திரையில் இருந்த 21 வயதுடைய யுவதியைக் கடத்திச் சென்றுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஆரையம்பதி ஜூனியர் வீதியில், இரு பெண் பிள்ளைகள் உள்ள ஒரு வீட்டிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன், அதிகாலை 1.30 மணியளவில் வெள்ளைவான் ஒன்றில் நான்கு பேர்கொண்ட குழுவுடன் வந்த, நாடாளுமன்ற வேட்பாளரான நா.விஸ்ணுகாந்தன், வீட்டின் வெளிக்கதவின் பூட்டை உடைத்து, வாசல் கதவையும் உடைத்து உள்நுழைந்ததுடன், வீட்டின் உரிமையாளரைத் தாக்கிவிட்டு, அங்கிருந்த யுவதியைக் கடத்திச் சென்றுள்ளனர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டவர், இலங்கை மக்கள் தேசியக் கட்சியின் தலைவர் எனவும், அவருக்கு திருமணம் முடித்து மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர் எனவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்நிலையில், பொலிஸார் இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடி போராடிய 84 உறவுகள் இதுவரை சாவு!



காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடிப் போராடி வந்த 84 உறவுகள் இதுவரை வடக்கு கிழக்கு மாகாணங்களில் உயிரிழந்துள்ளனர்.

வடக்குக் கிழக்கில் காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடிப் போராட்டம் மேற்கொண்டு வரும் அவர்களது உறவுகள், தமது பிள்ளைகளின் விடுதலையை வலியுறுத்திப் பல்வேறு போராட்டங்களை நீண்ட காலமாக மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடியலைந்து துயரங்களைச் சுமந்து வயோதிப ஓய்வு காலங்களில் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலைகளிலும் ஏனைய உறவுகளின் பாதுகாப்பிலும் இருந்து வருகின்றார்கள். இவ்வாறு தமது உறவுகளைத் தேடியலைந்த 84 உறவுகள் நோய் பீடிக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் 10 பேர் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு கிழக்கில் காணாமலாக்கப்பட்ட உறவுகள் வீதிகளிலிருந்து தமது போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். சர்வதேச நாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை தமது விடயங்களில் தலையிட்டு தீர்வுகளைப் பெற்றுத் தருமாறு கோரி உறவுகள் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

A/L 2021, 2022
புவியியல் A+
DCM - யாழ்நகர்
முழுநிலாக் கருத்தரங்கு : 01
"தேசப்படங்கள்"
காலம் :- 26.02.2021
நேரம் :- 10 - 02 pm
ஆசிரியர்:- P.S.V. தினேஸ் B.A (Hons) Geo.Spl
Dip in GIS & RS, M.phil in Geography
* Multimedia ஊடான கருத்தரங்கு
* வெளிமாணவர்கள் அனைவரும் இணைந்து கொள்ளலாம்.
* கையேடுகளிற்கான கட்டணம் மட்டும் அறவிடப்படும்.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை



| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 1985.05.12 | பிறந்த திகதி - 1981.05.02 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - அவிட்டம் 3 | நட்சத்திரம் - ரேவதி |
| செவ் - ----- | கு.செவ் - 01இல் |
| பாவம் - 20 1/2 | பாவம் - 45 1/2 |
| கல்வி - Engineering | கல்வி - பட்டதாரி |
| தொழில் - சிங்கப்பூர் Engineer | தொழில் - முகாமைத்துவ உதவியாளர் |
| எதிர்பார்ப்பு - Doctor மணமகள் தேவை. | எதிர்பார்ப்பு - அரசாங்க உத்தியோகத்தர் தேவை. |

யாழ் காலைக்கதிரில் காலை, மாலைப் பதிப்பிலும் முகநூலின் ஊடாகவும் மணமக்கள் விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.
அலுவலக நேரம் - எல்லா நாள்களும் காலை 8.30 தொடக்கம் 5.30 வரை.
பதிவுக் கட்டணம் 1000 + 300
Facebook - Kalyanamalaivada.com
குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
076 885 6925
077 857 8528

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.02.2021இல் வெளியிடப்பெற்றது.